**சார்பு நீதிமன்றம், பெருந்துறை**
**OS No: 26/2018**

2025-ம் ஆண்டு நவம்பர் மாதம் 11 நாள் தரப்பு Dw2 சாட்சியின் வாக்குமூலம் 1969-ம் ஆண்டு 44 வது சட்டம் பிரிவு 6(2)ன் படி திரு.அஷ்பக் அகமது, பி.ஏ.,பி.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் | கோபாலகிருஷ்ணன் |
| த.க.பெயர் | பொங்கியண்ணன் |
| கிராமம் | பெருந்துறை |
| மாவட்டம் | |
| வயது | 62 |

**பிசா2 நாள் 11. 11.2025**

**முதல் விசாரணை:** (சாட்சி அழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் முதல் விசாரணை செய்யப்படுகிறார்)

நான் பெருந்துறையில் குடியிருந்து வருகிறேன். ஆவண எழுத்தராக பணி செய்கிறேன். நீதிமன்றத்தில் இருந்து அனுப்பப்பட்ட அழைப்பாணை பேரில் சாட்சியம் அளிக்கிறேன். என்னிடம் காண்பிக்கப்படும் வாசாஆ 1 கிரய ஒப்பந்தம் மற்றும் வாசாஆ 7 ரசீது ஆகியவற்றை நான் தான் தயார் செய்து கொடுத்தேன். நான் 25 ஆண்டுகளுக்கு மேலாக ஆவணங்கள எழுதி வருகிறேனா என்றால் 42 ஆண்டுகளாக எழுதி வருகிறேன். நான் பத்திர பதிவு ஆய்வாளரிடம் ஆவண எழுத்தர் உரிமம் பெற்றுள்ளேன். பத்திர பதிவு ஆய்வாளர் அலுவலத்தில் இருந்து பெறப்படும் சுற்றறிக்கையின் அடிப்படையில் ஆவணங்கள தயார் செய்து பதிவிற்கு முன்னிலைபடுத்துவோம். வாசாஆ 1 ல் மூல பத்திரம் இல்லை, அது கூட்டுறவு சங்கத்தில் ஆவணம் இருப்பதால் அது குறித்து கடிதம் பெற்று தான் ஒப்பந்தம் பதிவு செய்யப்பட்டுள்ளது. ஆவணம் சங்கத்தின் பொறுப்பில் இருக்கும்போது அது குறித்து விற்கிரய ஒப்பந்தமோ கிரயமோ ஏற்படுத்திக் கொள்ளலாம் என பதிவு ஆய்வாளர் சுற்றறிக்கையின்படி தான் மேற்படி கிரய ஒப்பந்தம் பதிவு செய்யப்பட்டுள்ளது. கிரயம் செய்ய வேண்டுமென்றால் அசல் ஆவணம் ஸ்கேன்

செய்யப்பட வேண்டும். அசல் ஆவணம் ஒப்படைக்கப்பட வேண்டும் என்பது 2007 ம் ஆண்டு முதல் நடைமுறையில் உள்ளது. ஸ்கேன் நடைமுறையிலும் தற்போது 4,5 ஆண்டுகளுக்கு முன்பிருந்து நடைமுறையில் உள்ளது. பத்திர பதிவு அலுவலகத்தில் குறைந்த பட்சம் 2 சாட்சிகள் பத்திர பதிவு அலுவலகத்திற்கு வெளியே 5 சாட்சிகள் வரை ஒரு ஆவணத்தில் கையொப்பம செய்யலாம். பத்திர பதிவு அலுவலகத்தில் கைெயோப்பம் செய்யும் சாட்சிகளின் எண்ணிக்கை எப்போதுமே 2.

<u>குறுக்கு விசாரணை ( வாதி தரப்பில்)</u>

15.09.2017 ல் ஈஸ்வரமூர்த்தி மற்றும் அவரது குடும்பத்தினர் மற்றும் பாலகிருஷ்ணன் ஒரு கிரய ஒப்பந்தம் எழுத வேண்டும் என என்னை அணுகினார்கள் என்றால் சரிதான். ஈஸ்வரமூாத்தி தனக்கு பாத்தியபட்ட வீட்டை பாலகிருஷ்ணனுக்கு விற்பனை செய்ய இருப்பதாகவும் கிரயம் பற்றிய விவரம் பேசி முடித்துக்கொண்டதாகவும் கிரய ஒப்பந்தம் எழுத என்னை அணுகினார்கள் என்றால் சரிதான். கிரய ஒப்பந்தத்தில் கண்டுள்ள சொத்து ஒரு வீடு. ஈஸ்வரமூர்த்தி கிரய சொத்தின் ஆவணத்தின் நகல் ஒன்றை என்னிடம் கொடுத்தார். விற்கிரய ஒப்பந்தத்திற்கு பாலகிருஷ்ணன் அவரின் விவரங்களையும் ஈஸ்வரமூர்த்தி மற்றும் அவரின் குடும்பத்தினர் அவர்கள் விவரங்களையும் கொடுத்தனர். ஈஸ்வரமூர்த்தீ சொத்தை ரூ.4,50,000/-க்கு கிரயம் பேசியிருப்பதாகவும் ரூ4,00,000/- அட்வான்ஸ் தொகை எனக்கு என்னிடம் கூறினார் என்றால ஆமாம். ஈஸ்வரமூர்த்தி மற்றும் பாலகிருஷ்ணன் கூறிய விவரங்களை எழுதி படித்துக் காண்பித்து இருவரும் சரியாக இருப்பதாக சொன்னார்கள். வாசாஆ 1 கிரய ஒப்பந்தம் நான் தயாரித்தது தான். பின்னிட்டு ஈஸ்வரமூர்ததி வங்கி மேலாளர் கடன் முழுவதையும் தவணை திரும்ப செலுத்தி விட்டதால் ரசீது எழுதி பதிவு செய்ய என்னிடம் அணுகினார் என்றால் சரிதான். அவர் சொன்னதத்ன அடிப்படையில் நான் ரசீது தயாரித்து அவரிடம் கொடுத்தேன். அதில் அவர் கையொப்பம் செய்தார். வாசாஆ 7 தான் நான் தயார் செய்து கொடுத்த ரசீது ஆகும். மேற்படி கிரய ஒப்பந்தம் ஏற்படுத்திய காலத்தில் அசல் ஆவணம் இருந்தால் தான் கிரயம் பதிவு செய்யப்படும் என்றால் சரிதான். வங்கியில் கடனுக்கு ஒப்படைத்தஆவணம் கடன் தீர்த்தபிறகும் எவ்வளவு

நாள் இடைவெளியில் வரும் என உறுதியாக சொல்ல முடியாது என்பதால் தான் கிரய ஒப்பந்தத்தில் 1 வருட காலக் கெடு நிர்ணயிக்க சொன்னாரா என்றால் ஆமாம்.கிரய ஒப்பந்த தேதியில்ரூ4,00,000/- தொகையை பாலகிருஷ்ணன் ஈஸ்வரமூர்த்திக்கு கொடுத்தார் என்றால சரி. நான் எழுதி பதிவுக்கு கொண்டு செல்லும் ஆவணத்தில் தவறு இருந்தால் பத்திர பதிவாளர் ஆவணத்தை பதிவு செய்ய மாட்டார் என்றால் சரிதான்.

Dictated by me in Open court typed by Typist and read over to the witness and acknowledge by him/her to be correct.

M ASHFAQ AHAMED Digitally signed by M ASHFAQ AHAMED Date: 2025.11.11 17:58:16 -1000

Subordinate Judge,
Perundurai.

uploaded by SS